9 - JUN 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1981, ஏப்ரல் 24.

சித்திரை 12, துன்மதி—திருவள்ளுவர்-2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் ''

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் அக் கல்வியையே விரும்புவர்.

I. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் கொலை செய்யப்பட்ட ஆதி திராவிட ஆசிரியர்.

*வினா எண். 852—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்குடி தாலுக்கா ஸ்ரீமுஷ்ணம் கிராமத்தில் சப்பானி என்கிற அரிசன நல ஆசிரியர் 29-7-1980-ல் கொலை செய்யப்பட்டது பற்றி இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காததற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இறந்த சப்பானி என்கிற ஆசிரியரின் மனைவி திருமதி தனலட்சுமி கொடுத்த புகாரின் மீது ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலையத்தில் வழக்கொன்று உடனடியாக பதிவு செய்யப்பட்டு, புலன்

விசாரணையும் ரசாயன பரிசோதனையும் செய்யப்பட்டது. ஆசிரியரின் சாவு எந்தவித சந்தேகத்திற்கான காரணத்தாலும் ஏற்பட்டதல்ல எனத் தெரியவருகிறது.

காவலர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறும் குற்றச்சாட்டு சரியானவையல்ல.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தாலுகாவில் சப்பானி என்ற அரிசன ஆசிரியர் ஒருவர் கொலை செய்யப்பட்டு ஒன்பது மாதத்திற்கு மேலாகிறது. இதுசம்பந்தமாக ஒரு பெண் புகார் கொடுத்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது யார்? சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்த அரிசன ஆசிரியரின் மனைவியார் திருமதி தனலட்சுமி ஸ்ரீமுஷ்ணம் காவல் நிலையத்தில் 23—7—1980 அன்று இரவு 7 மணிக்கு புகார் செய்தார். சந்தேகத்திற்கிடமான சாவு என்று பதிவு செய்து கொள்ளப்பட்டு, உடன் புலன் விசாரணையும் நடத்தப்பட்டது. ஆசிரியர் 22—7—1980 அன்று இரவு இறந்துள்ளார். வினாவில் குறிப்பிட்டிருப்பது போல் 29—7—1980 அன்று ஏற்பட்ட சாவு அல்ல. பிரேத பரிசோதனை 24-7-1980 அன்று மேற்பகல் 10-30 மணிக்குச் செய்யப்பட்டது. பிரேத பரிசோதனையில் தெரிந்த விவரம் தலையின் பின்பாகத்தில் வலது காதிலிருந்து 4 அங்குல தூரத்தில் ஓர் ஆழமான காயமும் அதைச் சுற்றிலும் வீக்கமும் காணப்பட்டது. இறந்து போன நபரின் உடல் உறுப்புகளில் ஐந்தினை ரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதில் ஒன்றில் கூட விஷம் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது. இறந்து போன ஆசிரியர் சப்பானி என்பவர் தலையில் ஏற்பட்ட காயத்தால் இறந்திருக்க வேண்டும் என்று பிரேத பரிசோதனையில் தெரிகிறது. இறந்தவர் தலையில் ஏற்பட்ட காயம் குளத்தின் படிக்கட்டில் வழுக்கி விழுந்ததால் ஏற்பட்டது என்று புலன் விசாரணையில் தெரிகிறது. ஆகவே ரசாயன பரிசோதனை முடிவின்பாற்பட்ட மருத்துவர் கருத்தினாலும், புலன் விசாரணையில் தெரிய வந்த தகவல்களாலும் இந்த வழக்கு மேற்கொண்டு கொலை வழக்காக கொள்ளப்படவில்லை. ஆகவே இந்த அளவிலே அது முடிக்கப்பட்டிருக்கிறது.